

சிவகங்கையில் மறைந்த சிவகங்கை மாவட்டகழக துணைசெயலாளரும், காஞ்சிரங்கால் ஊராட்சி மன்ற தலைவருமான கே.எஸ்.எம். மணிமுத்து உடலுக்கு கூட்டுறவு துறை அமைச்சரும் சிவகங்கை மாவட்ட கழக செயலாளருமான கேஆர்.பெரிய கருப்பன் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். அருகில் மணிமுத்து மனைவி திருமதி.மலர்விழி மற்றும் மகள்கள் உள்ளார்கள்.



78வது ஆண்டு சுதந்திர தின விழாவை முன்னிட்டு ஆவடி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ, தேசிய கொடியை ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் பகுதி கழகச் செயலாளர் ஜி.ராஜேந்திரன் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத், மற்றும் ராஜா, கு.சேகர், சத்யா கோ.ரவி, குமார், இளங்கோ, பாலா, யுவராஜ், விஜயன், ஹரி, வெங்கடேசன் உள்பட பலர் உள்ளனர்.

### அம்மாச்சத்திரம் அருகே நிகழ்ந்த சாலை விபத்தில்

# உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

புதுக்கோட்டை, ஆக. 16 -

புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் வட்டம், வடவாளம், தெற்கு செட்டியாப்பட்டி, சொரியன் தெருவைச் சேர்ந்த திருமதி. மாரிக்கண்ணு (வயது 46) க/பெ. ரெங்கசாமி என்பவர் கடந்த 07.08.2024 அன்று சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்கு பாதயாத்திரையாக சென்றபோது புதுக்கோட்டை மாவட்டம், அம்மாச்சத்திரம் அருகே இருசக்கர வாகனம் ஒன்று எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் பலத்த காயமடைந்து சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மூளைச்சாவு அடைந்து சிகிச்சை பலனின்றி 08.08.2024 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் மூளைச்சாவு ஏற்பட்டதைத் தொடர்ந்து உயிரிழந்த திருமதி. மாரிக்கண்ணு அவர்களின் உடல் உறுப்புகள் அவரது குடும்பத்தினரின் சம்மதத்துடன் தானமாக வழங்கப்பட்டு அவரது உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. திருமதி. மாரிக்கண்ணு அவர்களது குடும்பத்தினரின் தியாக உணர்வை தமிழ்நாடு அரசு போற்றுகிறது.

இவ்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் முன்னிலை

# தமிழ்நாடு காத்தாடி திருவிழாவில் 250 வெளிநாட்டினர் பங்கேற்பு!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

சென்னை, ஆக.16-

கிழக்கு கடற்கரை சாலை திருவிடந்தை கடற்கரையில் நடைபெற்ற 3வது தமிழ்நாடு சர்வதேச காத்தாடி திருவிழாவினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் துவக்கி வைத்து பார்வையிட்டார்கள்.

செங்கல்பட்டு மாவட்டம் கிழக்கு கடற்கரை சாலை திருவிடந்தை கடற்கரையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை தனியாருடன் இணைந்து 15.08.2024 தொடங்கி 18.08.2024 வரை நடைபெற உள்ள 3வது தமிழ்நாடு சர்வதேச காத்தாடி திருவிழாவை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் துவக்கி வைத்து பார்வையிட்டார்கள்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே அனைத்து துறைகளிலும் தமிழ்நாட்டை முதன்மை மாநிலாமாக உருவாக்கி வருகின்றார். குறிப்பாக சுற்றுலாத்துறையில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் செஸ் ஒலிம்பியாட் போட்டியை சிறப்பாக நடத்தி உலக சுற்றுலா பயணிகளின் கவனத்தை ஈர்த்ததன் காரணமாக உலகின் பல்வேறு துறைகளை சார்ந்தவர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிக அளவில் மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொண்டு வருகின்றார்கள்.

தொடர்ந்து சுற்றுலாத் துறையின் மூலமாக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா, மலைவாசஸ்தலங்க



ளில் கோடைவிழாக்கள், பொள்ளாச்சியில் பலூன் திருவிழா, சென்னை தீவுத்திடலில் வெளிநாடுகள், வெளிமாநிலங்களைச் சேர்ந்த கைவினை கலைஞர்கள், கைத்தறியாளர்கள் பங்கேற்ற சென்னை விழா என சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையிலான நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

சுற்றுலா பயணிகளை கவரும் வகையிலான தொடர் நடவடிக்கைகளால் கொரோனாவிற்கு பிறகு 2021-ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022-ஆம் ஆண்டில் 4,07,139 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் 11,74,899-ஆகவும் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டிற்கு தற்போது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை 6,45,296 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021-ல் 11,53,36,719-ஆக இருந்து 2022-ல் 21,85,84,846 ஆகவும், 2023-ல் 28,60,11,515 என உயர்ந்துள்ளது. தற்போது தமிழ்நாட்டிற்கு 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை 15,49,10,708 உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.

தொடர்ந்து மூன்றாம் ஆண்டாக தமிழ்நாடு சர்வதேச காத்தாடி விழா இந்த ஆண்டு 2024 கிழக்கு கடற்கரை சாலை திருவிடந்தை கடற்கரையில் இன்று தொடங்கி 4 நாட்கள் நடத்தப்பட உள்ளது. பிரான்ஸ், ஜெர்மனி, தாய்லாந்து, மலேசியா, சுவிட்சர்லாந்து, வியட்நாம் மற்றும் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் சர்வதேச காத்தாடி அணிகளைச் சேர்ந்த 40 பட்டம் விடும் வீரர்கள் கலந்து கொண்டு, டால்பின்கள், குதிரை, பூனை, சுறாமீன், நீலத்திமிங்கலம், தங்க மீன்கள், பாம்பு, கரடி, ஆக்டோபஸ், கொரில்லா உள்ளிட்ட வெவ்வேறு வகையான 250க்கும் மேற்பட்ட காத்தாடிகளை பொதுமக்களுக்கு காட்சிபடுத்த உள்ளனர்.

இந்த காத்தாடி திருவிழாவில் தமிழ்நாட்டின் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டு சிறப்பை விளக்கும் வகையில் சிறப்பு பட்டத்தை தமிழக குழுவினர் பறக்க விடுவார்கள். ‘உங்கள் வாழ்க்கையை வண்ணமாக்குங்கள்’ என்பதே இந்த ஆண்டு காத்தாடி திருவிழாவின் மையபொருள் ஆகும்.

“கடந்தாண்டு 150 காத்தாடிகள் பங்கேற்றன. இந்தாண்டு பட்டம் விடுவோர் கூடுதலாக பங்கேற்பதால் அவர்கள் பறக்க விட உள்ள 250 காத்தாடிகளுக்கு அதிக இடம் தேவைப் படுவதால், கோவளத்திற்கு அருகிலுள்ள கடற்கரைப் பகுதியில் இந்த விழா நடைபெறுகின்றது.

இந்த ஆண்டு திருவிழாவின் முக்கிய சிறப்பம் சங்களில் ஒன்று கோப்ரா காத்தாடி ஆகும், மேலும் இந்த விழாவில் முதல் முறையாக மிகப்பெரிய ராட்சத வண்ணமயமான டெடி பியர்’ இடம் பெறப்போகிறது.

இந்த காத்தாடி திருவிழா சிறப்பாக உள்ளதை தெரிவிக்கும் வகையில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இன்று வருகை தந்துள்ளனர்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி. ச.கவிதா, திருப்போரூர் ஒன்றிய குழுத்தலைவர் இதயவர்மன், மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் புகழேந்தி கணேஷ் ஆகியோர் உள்பட சுற்றுலாத் துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்ட துணைச் செயலாளர்

# கே.எஸ்.எம்.மணிமுத்து மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 16–

சிவகங்கை மாவட்டக் கழக துணைச் செயலாளரும் – காஞ்சிரங்கால் ஊராட்சி மன்றத் தலைவருமான கே.எஸ்.எம். மணிமுத்து நேற்று (15.8.2024) மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து, கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்

### ரூ.706 கோடியில் தொழிற்சாலைப் பணியாளர்கள் தங்கும் விடுதியை திறந்து வைக்க வடகாலுக்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வல்லக்கோட்டையில் பிரம்மாண்ட வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஆக. 16 -

ரூ.706 கோடியில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைப் பணியாளர்கள் தங்கும் விடுதியை திறந்து வைக்க திருப்பெரும்புதூர் வல்லம் - வடகாலுக்கு நாளை 17 ஆம் தேதி மாலை வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வல்லக்கோட்டையில் கழகத்தினர் கழகக்கொடி-வரவேற்பு பதாகைகளை ஏந்தி நின்று பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்தார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

இந்தியாவிலேயே முதன் முறையாக சிப்காட் நிறுவனம் சார்பில், நம்மு



டைய காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் - வடகால் சிப்காட்டில் ரூ.706.5 கோடி மதிப்பீட்டில், கட்டப்பட்டுள்ள 18,720 படுக்கைகள் கொண்ட கூடிய தொழிற்சாலை பணியாளர்கள் தங்குவதற்கான விடுதி கட்டி முடிக்கப்பட்டு அதன் திறப்பு விழா நாளை (17.8.2024) 17 ஆம் தேதி மாலை 3.00 மணியளவில் வடகால் சிப்காட்டில் நடைபெறுகிறது.

நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வல்லம் - வடகாலுக்கு நேரில் வந்து இந்த தங்கும் விடுதியை திறந்து வைக்கிறார்.

வல்லம் - வடகாலுக்கு வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் வல்லக்கோட்டையில் எனது (தா.மோ. அன்பரசன்) தலைமையில் மேள தாளம் - பாண்டு வாத்தியம், அதிர் வேட்டுகள் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இந்த மாபெரும் வரவேற்பில் மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள்,மாநகர,பகுதி-ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், கழகச் செயல்வீரர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் நாளை 17 ஆம் தேதி மாலை 4 மணியளவில் வல்லக்கோட்டைக்கு வருகை தந்து, தமது கரங்களில் கழகத்தின் இரு வண்ணக் கொடியையும், வரவேற்பு பதாகைகளை ஏந்தி நின்றும் மிகவும் உற்சாகமான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வல்லம் - வடகாலில் நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு அளிக்கப்படும் இந்த மாபெரும் வரவேற்பில் பங்கேற்பது ‘நமது கடமை’ ‘நமது உரிமை’ என்ற அந்த உணர்வோடு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், முழுவதிலும் இருந்து ஒட்டுமொத்த கழகத்தினரும் அலைகடலென திரண்டு வந்து பிரமாண்டமான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று கழகத்தினரை அன்போடு அழைக்கிறேன்.

வல்லக்கோட்டையே திக்கு முக்காடும் வகையில் நாளை 17 ஆம் தேதி மாலை 4 மணிஅளவில் ஆயிரக்கணக்கில் பெருங் கூட்டமாக திரண்டு, அணிவகுத்து நின்று மிகப்பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### சிவகங்கை மாவட்ட கழகத் துணைச் செயலாளர்

# கே.எஸ்.எம்.மணிமுத்து மறைவு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அஞ்சலி!

சிவகங்கை. ஆக.16-

சிவகங்கை மாவட்ட கழக துணை செயலாளர் கே.எஸ்.எம்.மணிமுத்து மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சிவகங்கை மாவட்ட கழக துணை செயலாளராகவும் காஞ்சிரங்கால் ஊராட்சி மன்ற தலைவராகவும் இருந்தவர் கே. எஸ். எம். மணிமுத்து. வயது.59. நேற்று காலையில் காஞ்சிரங்காலில் சுதந்திர தின விழா மற்றும் கிராமசபை கூட்டத்திற்கான பணிகளை கவனித்துக் கொண்டிருந்தார்.

அப்போது திடீரென்று நெஞ்சுவலி ஏற்பட்டதால் சிவகங்கை அரசு மருத்துவ கல்லூரிக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார். அவரை பரிசோதித்த



மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினார்கள். மணிமுத்துவிற்கு மலர்விழி என்ற மனைவியும் ரெஜினாபானு யமுனாதேவி, என்ற இரண்டு மகள்கள் உள்ளார்கள்.

மணிமுத்துவின் இறுதிச் சடங்குகள் இன்று காலை 10 மணிக்கு திருப்பத்தூர் சாலையில் உள்ள அவரது இல்லமான கலைஞர் மாளிகையிலிருந்து நடைபெறுகிறது. நேற்று மணிமுத்துவின் உடலுக்கு சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரிய கருப்பன் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் மற்றும் கழக நிர்வாகிகள் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன், மறைந்த மணிமுத்துவின் மனைவி மற்றும் மகள்களுக்கு ஆறுதல் கூறினார். மணிமுத்துவின் உடலுக்கு மாவட்டம் முழுவதிலுமிருந்து திமுகவினர் மற்றும் அனைத்து அரசியல் கட்சியினர் பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.



இந்திய சுதந்திரத் திருநாளை முன்னிட்டு, நேற்று (15.08.2024) ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா பெருநகர சென்னை மாநகராட்சியில் அதிக சொத்துவரி செலுத்திய நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் முறையாக உரிய காலக்கெடுவிற்குள் சொத்துவரி செலுத்திய சொத்து உரிமையாளர்களுக்கு பாராட்டுக் கடிதங்களை (Letter of Appreciation) வழங்கி பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், கூடுதல் ஆணையாளர்கள் டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, (சுகாதாரம்) திருமதி ஆர். லலிதா, (வருவாய் (ம) நிதி), இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் விஜயா ராணி, துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, வட்டார துணை ஆணையாளர்கள் கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), எம்.பி. அமித், (தெற்கு), மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர்கள் த.இளைய அருணா (நகரமைப்பு), த.விசுவநாதன் (கல்வி), டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), மண்டலக்குழுத் தலைவர் (இராயபுரம்) பி. ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



பஹ்ரைன் நாட்டில், வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற தலைவர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் கூட்டம் நடைபெற்றது. இதில் பால்ராஜ், கருணாநிதி சண்முகம், சுல்தான் இப்ராஹிம், பெருவை பிரபா, வல்லம் பசீர், மன்னை செல்வா,முபாரக் அலி, சதீஷ் குமார், மீமிசல் கருமுத்து, மேலப்பூந்தை இஸ்மாயில், சரபுதீன், சங்கீதா பாபு, அசோக் குமார், குடந்தை ஆரிப், மொய்தீன், மஸ்தான், இப்ராஹிம், முகமது ஹக்கிம், ஆழியூர் சாகுல், அஸ்ரி முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.